Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953. விரோதிஞு (1889) ஆவணிமீ 28 உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு கார்த்திகைமீ கஉ வெள்ளிக்கிழமை (16 November. 1962) [இல-௩உ]

# பகைமைக்கும் அஞ்சாப் பணிவல்லாளர் ஆற்றியபணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்

## நாவலர் நல்லெண்ணம் நிறைவேறுமா?

அந்நியர் ஆட்சியினுல் ஈழநாட்டில் தமிழும் சைவ சமயமும் அடக்கி ஒடுக்கப்பட்டன. தமிழிற் பேசினுற் குற்றம்; சைவ நெறியில் ஒழுகினுல் தண்டம். பட்டம் பதவி பொருள் மோகத்தினுல் நம்மவருட் சிலரும் மதம் மாறினர்; அவர்களுக்குப் பிற்பாட்டுப் பாடினர். இங்ஙனமான பேரிருட் காலத்திலே ஞானப்பிரகாசர் மரபு, தமிழுக்கும் சைவத்துக்குமாகத் தழைத்தோங்கியது. இவர் மரபிலே நாவலர் பெருமான் 1822-ம் ஆண்டு தோற்றினர்.

தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், சமயசாஸ்திரம் ஆகியவற்றில் மிக்க புலமை பெற்றிருந்தும் அவர் உத்தியோகத்தை முற்றாக வெறுத்தார். சுற்றத் தொடர்புகளை விட்டு நீங்கினர். தமிழ் சைவம் என்னும் இரண்டினையும் வளர்ப்பதற்காகத் தம்மைத் தியாகஞ் செய்தார். இராப்பகலாகப் பணி செய்தார். பாடசாலைகள் தொடக்கினர். அச்சகங்கள் நிறுவினர்; சைவத் தமிழ் நூல்களை வெளியிட்டு உதவினர். பிரசங்கமாரி பொழிந்தார். அன்றும் இன்றும் என்றும் நாவலரானர்.

நாவலர் பெருமான் தமது இலட்சியங்கள் நிறைவேற அதற்கென ஒரு தர்மம் ஏற்படுத்தினர். அத்தருமம் இன்னும் நிலவி வருவதை யாம் யாவரும் அறிவோம்; நாடு அறியும். அப்பெரியார் காட்டிய வழியில் நாமும் சென்று சைவத் தமிழ்ப் பணி புரிய வேண்டியது இன்று அவசியமானதாகும்.

நாவலர் தம் சமயவிருத்தியில், தமது உயிருக்கு வரும் ஆபத்திற்கும் பயப்படாது நின்றுழைத்தவர். புறச் சமய கண்டனங்களால் இவருடன் பலர் பகைமை பாராட்டினர். பாதிரிமாரையும் புறச் சமயிகளையும் கண்டித்ததுடன் சைவ சமயத்திற் படிந்த ஊழல்களையும். வேதாகம நெறிக்கு மாறான பழக்க வழக்கங்களையுமெல்லாம் அவர் கண்டித்துத் திருத்தினர். முதன்மையாகக் கோயிலிற்படிந்த குறைகளைப் பச்சைப் படியாகப் பேசினர்; எழுதினர். நல்லூர்க்கந்தசுவாமிகோயிலைப்பற்றி அவர் எழுதிய உணர்ச்சிக் கட்டுரைகள் புகழ்பெற்றவை.

தாம் கண்ட ஊழல்களைப் பொருத்தமான நிகழ்ச்சிகளைக்கொண்டு அசைக்க முடியாத நியாயத்துடன், உண்மையினின்றும் பிறழாத கோவையுடன் அவர் வர்ணிக்கும்பொழுது நமது புலவர் சட்டத்தொழில்புரிந்திருந்தால் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பார் என்று தோன்றுகிறது.

நாவலர் அவர்கள் தமிழ் சமயத் தொண்டுகளுடன பொதுப் பணியிலும் நின்றுழைத்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிகாரிகள் செய்த அநியாயங்களையெல்லாம் அம்பலமாக்கிப் பொதுமக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தார்; அரசியலில்வெகு தீவிரமான பங்கெடுத்தார்

தமது பிற்காலத்தில் எண்ணியிருந்த ஒரு கருமம் தமிழர் யாவரும் கல்வியறிவில் மேன்மைபெற்று விளங்கவேண்டுமென்பதற்காக ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவித்து நான்கு ஆண்டுகளில் சகல கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டுமென்பதே. இந்த இலட்சியத்தைநிறைவேற்ற யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழச் சங்கமும் ஸ்தாபிதமானது. நாவலர் அவர்களது இந்த எண்ணம் நிறைவேறுமா?

ஆசிரியர்
சி. சீவரத்தினம்

## முதலாவது தமிழர்

கொழும்பு ஏந்திர திட்ட (இஞ்சினியரிங்) கல்லூரியில் மாணவர் கழகத்துக்கு முதல் முதலாக கே. சுந்தரலிங்கம் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த [illegible] தெரிவுசெய்யப்பட்[illegible] அறியப்படுகிறது.

## நற் சிந்தனை

அணங்கு தந்தெமை
ஆட்டும் மனத்தை
இணங்காம லெந்தை
யிணையடி பணிகுதும்.

## நல்லூரில் நாவலர் சிலை நிறுவ ஏற்பாடு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் உருவச்சிலை ஒன்றை இந்துசாதனப் பத்திரிகை ஊழியரான திரு. சம்பந்தர் கனகரத்தினம் உருவாக்கியுள்ளார். இதனை அகில இலங்கை பொதுஜன சேவைச்சங்கம் நல்லூரில் பொருத்தமான இடத்தில் நிறுவ முன்வந்திருக்கிறது.



## நாவலர் ஆண்டு

அந்நிய நாட்டவர் மதமாற்ற வலையில், சிறு சிறு தன்னலங்களுக்காக விழுந்து தம்மை வளர்த்துவிட்ட மொழியையும், இனத்தையும், மதத்தையும் துறந்து மறந்துவிடும் சின்னத்தனமான செய்கையில் நம் தமிழர்கள் ஈடுபட்டிருந்த காலத்தில், தவப்பயனுல் வந்தவதரித்த நாவலரைப் போல, அண்டிக்கெடுக்க அயலினத்தார் கிளம்பியுள்ள இன்றும் ஒரு நாவலர் உருவாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சோம்பல் சோற்று மதமாற்றத்திலும், இன மதத் துரோகத்திலும் நம்மவர்கள் ஈடுபட்டு இழுக்குத் தேட முனைந்துள்ள இந்த நிலையில் இவ்வோராண்டுக்கால இடைவெளியை நாவலராண்டாகவே கொண்டாடி, சைவத் [illegible] மதம்மாற்றும் சிறுமதியாளரின் செ[illegible]ப்படும்படி சமயத்தொண்டில் ஈடுபட்டுழைப்பார்களா ?

## திருவாவடுதுறையில் நாவலர் பட்டம்பெற்றவர்

நமது தமிழகம் சான்றோர் பலரையுடையது. ஈழமண்டலத்து யாழ்ப்பாணம் அறிஞர் பெருமக்களைத் தந்து சிறப்புடன் விளங்குவது. மனப்புலிசிங்க முதலியார், மாதகல்மயில்வாகனப்புலவர் இருபாலை சேனதிராச முதலியார் முதலியோர் பெரும் புலமைச் சிரோமணிகள், நூற்று இருபதாண்டுகளுக்கு முன் நல்லூரில் ஒரு பெரியார் தோன்றினர். நல்லூரோ முருகனருள் பொழியும் பெருநகரம். ஆங்கேதான் நாவலர் பெருமான்தோன்றினர். சைவ சமய எதிர்ப்பு அக்காலம் அதிகம். நாவலர் விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவ சின்னங்களோடு திகழுவார். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழிச் சதுரப்பாடுடையவர் நாவலர். ஆறுமுகன் என்று அக்காலம் வைகச்சாத்திடுவார். "யாழ்ப்பாணச் சமய நிலை" என்று ஒரு கட்டுரை நூல் வெளியிட்டார் நாவலர். அவரை இலக்கண இலக்கியப் புலமையுடையவர் என்று மட்டுங் கூறமுடியாது. கிறீஸ்தவர்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

எதிர்வரும் நாவலர் தினத்தன்று ஆறுமுகநாவலரின் உண்மையான புகைப்படத்தினை அச்சிட்டு இலவசமாக வழங்கவும் மேற்படி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## இரு தினங்கள் நடைபெறும் நாவலர் விழா

நாவலர்பெருமானுல் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட நிறுவனங்களுள் ஒன்முன வண்ணை நாவலர் பள்ளிக்கூடத்தில் இம்மாதம் 18, 19-ஆம் திகதிகளில் (ஞாயிறு திங்கள் கிழமைகள்) நாவலர் நினைவு விழா நடைபெற இருக்கிறது. முதலாவது நாள் மாலை 6மணி தொடங்கி நடைபெற இருக்கும் சைவ சாதனை மாநாட்டில் திரு. சி. உ. சோமசேகரம். திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை, திரு. மு. ஞானப்பிரகாசம், வித்துவான் வ. செல்லையா ஆகியோரும், மறுநாள்விழாவில் பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம், வித்துவான் க. கி. நடராஜா ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

இறுதிநாள் திரு. சி. சீவரத்தினம் எழுதிய நாவலர் சமயப்பணி என்னும் நூலும் திரு. மு. வைரமுத்து அவர்ளால் வெளியிடப்படும். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ஞு கார்த்திகை மீ கஉ வெள்ளிக்கிழமை

## நாவலர் நாட்டிலா நாத்திகமும் நயவஞ்சக மதமாற்றமும்?

வஞ்சகத் தீங்காம் மதமாற்றத்தால் முன்னொருகால் நஞ்சு பரவவைக்கப்பட்டபொழுது இறைவன் இன்னருளால் நால்வர் அவதரித்துச்சைவநன்மக்களைப் புத்தம் சமணம் புகுத்திய விபரீதத்தினின்றும் விலக்கிப் பெருந்தொண்டாற்றினர். அதற்குப் பின் வேறொரு கோணத்திலிருந்து விவிலிய மதத்தினரால் விபரீதம் எழுந்த நேரத்தில் நாவலர் அவர்கள் தோன்றி எங்கள் நாட்டைக் காப்பாற்றி வைத்தனர். நால்வரும் நாவலரும் செய்த நற்பணி நாட்டின் அரணாக நெடுங்காலம் தமிழகத்தைத் தாங்கி வந்தது.

ஆனால் இன்று பழைய படி மத மாற்ற விபரீதம் தோன்றியிருக்கின்றது. நால்வரும் நாவலரும் ஆற்றிய பெருந் தொண்டின் பயனும் பயன்படாமற் செய்வதற்குச் சூழ்ச்சிகள் கையாளப்பட்டு வருகின்றன. இந்த இன்னலைப் போக்குவதற்கு இறைவனை வழிபட்டு நாவலர் நற்றகையாரின் நாமத்தில் நாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து மேன்மைகொள் சைவநீதி விளங்க வைப்பதே சாலச் சிறந்த வழியாகும்.

நாவலர் நினைவு இந்தப் பேராபத்தான வேளையில் நாடோறும் இருத்தல் வேண்டும். நாவலர் நாள், நாவலர் வாரம், நாவலர் திங்கள் — இல்லை நாவலர் ஆண்டு கொண்டாடி மத மாற்ற விபரீத விபத்தினின்று எம்மை நாம் விடுவித்துக்கொள்ளச் சமயத் தொண்டாற்றச் சைவப் பெருமக்கள் சத்தியஞ்செய்தல் வேண்டும்.

ஆயிரம் ஆயிரமாகச் சைவமக்கள் அந்நிய மதமாம் புத்தத்திற் புகப் புறப்படுகின்றனர் என்ற செய்திகள் வெளிவருவதையும் பார்த்து வாளா இருப்பவர்கள் நாவலர் நினைவு நாளைக் கொண்டாடுவதில் என்ன பயன்? கூட்டத்திற் கூடி நின்று பழம் பெருமை பேசிவிட்டு நாட்டைச் சீர்கேட்டுக்குள்ளாக்குவது நாவலர் நாமத்துக்குத் துரோகஞ் செய்வதாகும். மணிவாசகர் ஆற்றிய பெரும்பணி சைவமக்கள் புத்தமதத்திற் புகாது தடுத்து வைத்ததே. நுணுக்கமான தருக்கத்திலே புத்தரை வாதில் வென்று சைவசமயமேசமயமென்று நிலைநாட்டியருளினர் வாதவூரடிகள். திருவாசகத் திருவிழாவும், மணிவாசகர் நினைவுநாளும் கொண்டாடும் சைவர்கள் புத்தமதம் சைவ நாட்டிற் புகுந்து மக்களை மயக்கித் தங்கள் மயமாக்கத் தீவிரமாக உழைக்கும் இவ்வேளையில் கைகட்டிக் கொண்டிருக்கலாமா?

பேசிப் பேசி நாட்கள் பல கழித்துவிட்டோம். பேரிடர் எம்மை நோக்கி எழுந்திருக்கின்றது. சைவ மக்களே எங்கள் பாரம்பரியமும் சால்பும் எங்கே? நாம் எங்கே? நால்வர்களின் நற்றொண்டெங்கே? நாவலரின் பெரும் பணி எங்கே? நாம் எங்கே? நமக்குத் துரோகிகள் நாங்களா? புறமதம் புகுத்த நிற்கும் புத்தர்களா? உள்ளத்தில் ஊன்றி உணருங்கள். உண்மைச் சைவமக்களைக் காப்பாற்றத் தெய்வப் பணி புரியுங்கள். சிவபெருமான்திருவருளை நாடுங்கள். கணமும் காலந்தாழ்த்தாது நாவலர் ஆண்டு நிறுவி நற்றொண்டாற்றுங்கள்.

—

# மதம்மாறுங் காலத்தில் வந்துதித்த நாவலர்

—0—

சைவப் புலவர்
திரு வ. கந்தசாமி

சமயகுரவர்களுக்குப் பின் சைவமும் தமிழும் வளர்ச்சி குன்றியிருந்தது. இந் நிலையில் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஆறுமுகநாவலர் அவதரித்தார். பணத்துக்காகவும் பட்டத்துக்காகவும் உத்தியோகத்திற்காகவும் மதம் மாறும் காலம் நாவலர்காலம். நாவலர் இளமை முதல் நன்கு கற்று முத்தமிழ் வல்லுனராய் விளங்கினர்.

முதன் முதல் பார்சிவல் துரையிடம் தமிழ்உபாத்தியாயராகக் கடமையாற்றினர் நாவலர். கிறீஸ்து மதத்தைப் பரப்புவதற்குப் பார்சிவல் துரை ஆற்றிய பணிகளைக் கண்ணுரக்கண்டார். சைவசமயத்தின் நிலையினை உணர்ந்தார். அன்று முதல் சைவமும் தமிழும் தனது இருகண்கள் எனக்கொண்டு வாழத் தலைப்பட்டார்.

சைவமும் - தமிழும்வளர்ச்சியடைய வழிகள் தேடினர். மக்கள் எல்லாம் சமயத்தின் உண்மைப் பொருளை அறிவதற்குச் சமயக் கல்வி அவசியம் என்று கண்டார். திண்ணைப்பள்ளிக்கூடங்கள் நடாத்தி வந்தார். தமது மாணவர்களுக்கு முதல் பெரிய புராணத்தையே கற்பித்து வந்தார். பெரியபுராணத்தில் மிகுந்த பற்றுடையவர். சமயப் பாடசாலை நிறுவ முன்வந்தார். பிடியரிசி சேர்த்துப் பாடசாலையை நடாத்தினர். இவருக்கு உறுதுணையாக திரு. சதாசிவம்பிள்ளையவர்கள் இருந்தார்கள்.

சைவ சித்தாந்த நெறியினின்றும் சிறிதேனும் வழுவாதவர் நாவலர்பெருமான். பிழையென்று கண்டவற்றை நேரிற் கண்டிக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்.

சைவமும் தமிழும்வளர்ச்சியடையச் செய்யும் இரு பெரும் பணிகளை மேற்கொண்டு வாழ்ந்தார். வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் வெள்ளிதோறும் சமயப்பிரசங்கம் செய்து வந்தார். எல்லாத் தானங்களிலும் வித்தியாதானமே சிறந்தது என்ற முடிபுக்கு வந்தார். அந்த முடிபின் காரணமே இன்று வண்ணார்பண்ணையிலும் - கோப்பாயிலும் சிதம்பரத்திலும் விளங்கும் கல்விச்சாலைகள். சமயக் கல்வியே முதன்மையானது என்று மக்களுக்கு எடுத்துரைத்தார்.

செய்யுள் நடையிலேயிருந்த புராண இதிகாச நூலைகளை வசனநடையிலே யாத்துத் தந்தார். அதனால் அன்றோ கற்று வல்ல சான்றோரால் வசனநடை கைவந்த வல்லாளன் என்று போற்றப்பட்டார்.

இவர் நூல்களை வெளியிடும்போது எவ்வித பிழைகளும் இன்றி வெளியிடுவார். அச்சகத்தில் நாவலர் உடனிருந்து பணிபுரிவதினாலேயே பிழையின்றி நூல்கள் வெளியாயின. சொல்லளவில் நில்லாது செய்கையளவிற் காட்டிய மகான் நாவலர்பெருமான்.

ஈழநாட்டிலிருந்து தாய்நாடு சென்று சைவத்தமிழ் முழக்கம் செய்தார். சென்னையில் அச்சியந்திரசாலையை ஸ்தாபித்தார். இறைவனிடத்து இடையறாத பத்திபூண்டவர்.

சைவ ஆலயங்கள் சிறந்த முறையில்நடைபெற அரும்பாடுபட்டார். நாவலர்பெருமானின்செயற்கரிய செயல்களை ஆராய்வோமேயானால் அன்னாரின் தன்னலமற்ற தியாகம் வெள்ளிடைமலை போல் விளங்கி நிற்கின்றது.

ஏறுபோல் வீறு நடை நடந்து சைவம் காத்த காவலனன்றோ நாவலர். நாவலரின் பெரிய புராணசூசனம் ஒன்றே அவரின் நேரிய வாழ்க்கையை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

தன்னது தோற்றத்தாலும், தகவுறு போதத்தாலும், பொன்னெனன யாரும் போற்றும் புத்தகம் பலவற்றாலும், வண்மைசேர் வாக்கினாலும் மிளிர்ந்து விளங்கினர் நாவலர் பெருமான்.

நாவலன் தொண்டாலன்றோ நம்மதம் வாழ்வு பெற்றது. நாவலரின் பண்புமிக்க சேவையினைப் பாராட்டாதவர் யாரும் இல்லை. பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்த பெருமையினையுடையவர் நாவலர்.

சைவசமயம் என்ன என்பது தெரியாது தடுமாறி மாயாவாதக் கொள்கைகளைப்பு குத்திவரும்வேஷக்காரருக்கு நாவலர் இன்றிருந்தால் தக்க பதில் பகர்ந்திருப்பாரன்றோ! என் செய்வது!

இவ்வாறு உடல்-பொருள் ஆவி மூன்றனையும் சைவமும்—தமிழும் வாழத் தியாகம் செய்து, என்றும் பிரமச்சாரியாக வாழ்ந்தார் நாவலர்.

அன்னாரின் குருபூசை விழாவைக் கொண்டாட வேண்டியது சைவத் தமிழ் மக்களின் தலையாய கடனாகும். ஆனால் கொண்டாடுவதோடு நில்லாது அவரின் இலட்சியங்களை நிலைநிறுத்த ஆக்க வேலைகள் செய்ய வேண்டியதே முதற் கடனாகும்.

1. நாவலரின் உருவச்சிலை நாட்டல்
2. ஆலயங்கள், பாடசாலைகள், சைவ ஸ்தாபனங்கள் தோறும் புராண படனம் — சமயப்பிரசங்கம்—திருமுறை ஓதுதல் என்பன நடைபெற வேண்டும்,
3. சைவ—தமிழ் ஆராய்ச்சிக்கழகம் நிறுவப்பட வேண்டும்.
4. சித்தாந்த வகுப்புகள் நடைபெற வேண்டும்.

வாழ்க நாவலர் பணி!

—

## நினைவ முரைவல பேரியோனே!

— திரு. சி சின்னையா —

தமிழொ டுயர்சிவ சமய மிவையிரு தமது விழிகளி
னுடலாவி
சகல பொருள்களு முதவி வளர்தர முயலு முணர்வெழு
தயவாளன்
அமிர்த மெனவரு முரையி னடைதனை யறிய வெவர்களு
மினிதான
அரிய முறையினை யெழுதி யுதவிய பெருமை வருமுய
ரறிவாளன்
குமர னருள்மழை யினிது பொழிதரு குறைவில் சினகர
மூளதான
குணம துயர்பெரு மனிதர் பலருள பதியில் வருமருள்
கொடையாளன்
அமல னிருதிரு வடிக ளவைவழி படுவ தமயமு
மயராதோன்
அழகு பெறுமுரை வலவ னவனரு ளடிக ளவைதின
நினைவேமே.

## இந்தியாவுக்கு முழு ஆதரவு

சீன - இந்திய எல்லைத் தகராற்றில் இந்தியாவுக்கு முழு ஆதரவை அளிப்பதென்ற ஒரு தீர்மானம் 11-11-62 ல் நடைபெற்ற சைவபரிபாலன சபை செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தின் படிகளை இந்திய இலங்கைப் பிரதமர்களுக்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில், சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்போதுள்ள இடங்களிலிருந்து வேறு இடங்களுக்கு இந்து கோவில்களை மாற்றுவதென்ற அரசாங்கத்தினது நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேறியது. இத்தீர்மானத்தின் படிகளைப் பிரதம மந்திரி, கலாச்சார மந்திரி, தமிழ் எம். பிக்கள் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

—

## எழுதுங்கள்

தமிழில் மாதசஞ்சிகை எவ்விதம் அமையவேண்டும். உங்கள் தபால் முகவரியுடன் எழுதுங்கள்.

அச்சிடுவோர், வெளியிடுவோர் புத்தக விற்பனையாளர்களின் தபால் முகவரி வேண்டும்.

எஸ். என். சொக்கநாதன்
புலோலி வெஸ்ற்,
பொயின்ற் பீட்று,
(சிலோன்.)

S. N. Soccanathan,
PULOLY WEST,
POINT PEDRO.
(Ceylon)

M. 176, 9. 16-11-62.

## அகிலஇலங்கைப் பொதுசன சேவைச்சங்க ஆண்டுவிழா

—0—

மேற்படி விழா நல்லூர்த் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் 9-11-62 வெள்ளிக்கிழமை 4 மணி முதல் முத்தமிழ்மணி C. S. S. மணி பாகவதரவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தலைவரவர்கள் சபையின் தொண்டைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றிய பின்னர் ஆசிரியை செல்வி பரமேஸ்வரி சின்னத்துரையவர்கள், ஸ்ரீ பொன் அப்புக்குட்டியவர்கள், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள், சைவபரிபாலனசபைச் சமயப் பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனமவர்கள், ஆசிரியர் திரு. க. முருகேசு ஆகியோரும் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

"தமிழன்" ஆசிரியர் திரு. இ. நாகராசனவர்கள் "நல்லூர் முருகன் பெயரில் கவிதைகள்" பாடி அரங்கேற்றினர்கள்.

சபைக் காரியதரிசி திரு. த. இராசரத்தினத்தால் இயற்றப்பட்ட "நல்லூர்க் கந்தன் நாமபஜனை பாடலகளை மாணவன் ஒருவர்பாடி அரங்கேற்றினர். ஈற்றில் தலைவர் யாவர்க்கும் நன்றி கூறினர்.

—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் (18-11-62 — 24-11-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். வாகனமூலமான தொல்லைகளும் இழப்புக்களும் ஏற்படும். உமது அதிகப்படியான கொடுக்கல் வாங்கல்களில் நீர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பணமளவில் சாதகமான வாரம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

குடும்ப நிலை திருப்திகரமாயிருக்காது. இரகசிய எதிரிகள் மூலமான தொல்லைகள் ஏற்படும். புதிய முயற்சிகள் தடங்கல்படும். வழமையான காரியங்களில் சில மாற்றம் ஏற்படலாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

நண்பர்களுடனும் இனத்தவருடனும் சச்சரவுகளுக்கு இடமுண்டு. ஆனால் நீர் உமது எதிரிகளை நிச்சயம் வெற்றி கொள்வீர். பண இலாபங்களும் உண்டாம். ஆனால் மன நிம்மதி இருக்காது.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்ப உயர்ச்சி ஏற்படலாம். உடல் நிலையும் சில காலத்திற்குப் பாதிக்கப்பட்டிருக்கும். மன நிம்மதி இருக்காது. இடர்களிலிருந்து நண்பர்கள் காப்பாற்றுவர். தாய் வழி உறவினரும் உதவியாக இருப்பர்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

இவ்வாரமும் தொடர்ந்து சாதகமானதாக இருக்கும். தம்பி தங்கைகள் மிக உதவுவர். எதிரிகளுக்கு இடையூறு ஏற்படும். கண்ணேய்களுக்கு இடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நல்ல வாரம். தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம், ஆனால் மன நிம்மதி இருக்காது.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். உமது சொந்தப்பிரச்சினைகள் சில தீர்வுபெறும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். உடல் நிலை திருந்தவேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

உமது உடல்நிலை பாதிக்கப்படும். தந்தையாரின் உறவினர் தொடர்ந்து தொல்லை தருவர். விவசாயமூலமான இலாபங்கள் நிச்சயம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குழப்பகரமான வாரம். வார முதல்நாள் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். அலுவலகத்தில் சச்சரவுக்கு இடமுண்டு. உடல் நிலையும் ஊறுபடும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்பச் சச்சரவுகள் தொடரும். திங்கள் செவ்வாயும் புதன் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். மிகுதி நாட்கள் ஓரளவு நல்லவை.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

வார முற்பாதிப்பகுதி வியாபார ஈடுபாடுகளுக்கு ஏற்றது. பண இலாபமும புகழும் நிச்சயம். புதன் மாலையையும், வியாழன்வெள்ளியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். வார இறுதி திரும்பவும் சாதகமானதாக மாறும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாக இருக்கும். தந்தைவழி உறவினர்கள் சில [illegible] பணமளவில் ஒரு நல்ல வாரம். வாரக்கடைசி நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

## நல்லை நாவலன்

— திரு. மூ. வன்னியசிங்கம் —

நல்லை நாவலன் நான்மறை யாளன்;
கல்லா தவர்க்குங் கலையறி வூட்டி
புல்லார் தங்கள் போக்கினை யொழித்தோன்
வல்லார் வகுத்த வழியைத் திருத்தி
எல்லா நயமு மிறையென வுணர்த்தி
நில்லா நெறிகளின் நீர்மை புகட்டி
பல்லோர் பணிவும் பயனுறப் பெற்றேன்
கல்வி கரையில நிலையுள தெனவே
செல்லிட மெல்லாஞ் சீரிய முறையிற்
சொல்லிய கருத்துஞ் சுவையு முணர்ந்தோர்
பல்லோரு மேத்திப் பணிந்தெழு வோனே
கல்லார், கற்றார், வல்லார், அல்லார்
எல்லோரு மறியுந் தெளிதமி ழெழுதித்
தில்லையுட் கூத்தன் சிதம்பரத் தையன்
கல்விக் கதிபதி யாக்கிடப் பெற்றேன்
சொல்வித் தகனும் தொல்தமி ழறிஞனை
எல்லோரு மேத்திப் பணிவாம் என்றும்!

## சமய தீட்சை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஷ்ஷ சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வேதாரணியம் ஸ்ரீமத் வே. தியாகராசாக் குருக்கள் அவர்கள்மூலம் 9-11-62வெள்ளிக்கிழமை 45 பேர்களுக்கு சமயதீட்சைசெய்யப்பட்டது.

ஸ்ரீமத் வே. தியாகராசாக் குருக்கள் அவர்கள் தீட்சைக் கிரியையின் பின்பு சமய தீட்சையைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர். தீட்சையென்பது அஞ்ஞானத்தைக் கெடுத்து ஞானத்தை வழங்குவதாகும். மகாமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஒருவர் செபஞ் செய்வதற்கு அதிகாரம் இத் தீட்சையினுல் உண்டாகின்றது. பஞ்சாட்சர செபம் இம்மையின்பத்தையும் மறுமைப் பேரின்பத்தையுங்கொடுக்கவல்லது. அதனை ஒருவர் பக்தியோடு செபஞ் செய்தால் மேற்கூறிய பேறுகளை அடையலாமெனவும் கூறினர்.

**நாவலர் வித்தியாசாலையில்**

வண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் 25 பேருக்கு வேதாரணியம் பிரம்மஸ்ரீ அ. தியாகராசக் குருக்கள் அவர்களால் சிவ தீட்சை செய்யப்பெற்றது.

—:—

## தேர்வும் பரிசும்

—0—

உரும்பராய் இந்துசமய விருத்திச் சங்கம், சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடத்திவரும் சைவசமய வகுப்பிற் கற்கும் மாணவர்களுக்கும் ஏனைப் பாடசாலைகளிற் கற்கும் மாணவர்களுக்கும் ஒரு சைவசமய பாடத் தேர்வு நடத்தி அத்தேர்வில் திறமையாகச் சித்தியெய்தியவர்களுக்கு, கந்தசட்டி முடிவில் திருக்கல்யாண தினத்தன்று திரு. மு. பசுபதி அவர்களின் தலைமையில் பரிசுகள் வழங்கியது.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6643ம் இலக்க வழக்கில 1962ம் ஆ புரட்டாதி மீ 21ம் உ யைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழேவிபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1962ம்ஹு மார்கழிமீ 18ம் உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற்காணும் ஆதன டாப்பின் ஒழுங்கின்படி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

(இறந்தது) கரவெட்டி மேற்கு கந்தப்பு விசுவலிங்கம்
வழக்காளி.

கரவெட்டி மேற்கு கந்தப்பு விசுவலிங்கம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை
–பதில் வழக்காளி

எதிராக

கொற்றகேணு வேலுப்பிள்ளை கந்தசாமி காலஞ்சென்ற கார்த்திகேசு வல்லிபுரத்தின் ஆதனத்துக்குகாரியஸ்தன்என்றவகையில்
எதிராளி.

அறவிட வேண்டிய தொகையின் விபரம்,

சித்தாரித்த தொகை:– ரூபா 4976 – 66. 11-3-60 தொடக்கம் 9-6-60 வரைக்கும் ரூபா 3000க்கு 8 வீத வட்டி ரூபா 58-66 9-6-60 தொடக்கம் 18-10-60 வரைக்கும் கூடிய தொகை ரூபா 5035-32 க்கு வட்டி ரூபா 90-91. கோட்டுச் செலவு ரூபா 283-24. மொத்தம் ரூபா 5409-47.

ஆதன டாப்பு

1. கரவெட்டி குறுளிக்குறிச்சியிறை வாரியததனை. நி பர. 16 ஷ தோட்டம் 2, இப் பிரிவுகளில தெற்குப்புறமாக 2/3 பங்கில் தெற்குப்புறமாக நில. பர. 2 நீக்கி அதற்கடுக்க நில. பர, 2-ல் ஆட்சிப்படி வடக்கரைவாசியில் மேற்கரைவாசிக்கு நில. பர. ½. எலுமிச்சைகள், வாழைகளும். எல்லை கிழக்கு 3-ம்ஆதனம். வடக்கும் தெற்கும் கந்தப்பு முருகேசுவுக்குடைய ஆதனம். மேற்கு செல்லையா பெண் வேதாத்தைக் குடைய ஆதனம், இது முழுவதும் முழுக்காணிக்குட்பட இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலுரித்தும்,

2, கரவெட்டி வென்றிக குறிச்சியிறை, இலகடி நில. பர 6⅜. ஷ வீடு 1. ஷ நில. பர 3 3/8. கூடிய நில.பர. 9¾ வீடு 1 இப்பிரிவுகளில் ஆட்சிப்படி தெற்குப்புறமாக ⅓ பங்குக்கு நில. பர. 4- இதில் கிழக்கரைவாசிக்கு நில,பர. 2. பனைகள் வடலிகளும். எல்லை கிழக்கு சேதர் சிதம்பரப் பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு 5-ம் ஆதனம். மேற்கு கணபதிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்குடைய ஆதனம்- தெற்குசிதம்பரநாதர் கந்தப்புவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதிலும் சொரியலாய் நில. பர. 1¾-ம். இதற்குச் சேர்ந்த பனைகள் வடலிகளும்.

3. கரவெட்டி குறுளிக்குறிச்சியிறை வாரியத்தனை நில. பர. 16. ஷதோட்டம் 2. இப்பிரிவுகளில் தெற்குப்புறமாக 2/3 பங்கில் தெற்குப்புறமாக நில,பர. 2 நீக்கி அதற்கடுக்க நில, பர. 2–ல் ஆட்சிப்படி வடக்கரைவாசியில் கிழக்கரைவாசிக்கு நில, பர. ½. பனைகள் தென்னைகள பலா தோடைகளும், எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் தெய்வானைகும் மறுபருக்குமுடைய ஆதனம், வடக்கு இலகடி வயிரவசுவாமி கோயிலுக்குடைய ஆதனமும் இன்னும் ஒரு ஆதனமும். மேற்கு மேற் சொல்லிய 1-ம் ஆதனம். தெற்கு கார்த்திகேசு கந்தப்புவுக்கும் மறு பேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் 7/12 பங்கும் வடக் கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்:

4. கரவெட்டி வென்றிக் குறிச்சியிறை, தெடுத்தனை கிழக்கு நெற்பர. 5¼. இதில் வடக்குப் புறமாக அரைவாசிக்காக ஆட்சியிலிருக்கும் நெற்பரப்பு 2 5/8. எல்லை கிழக்கு தாமர் பெண் வள்ளியம்மைகளும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு வழி நடையும் தண்ணர் வாய்க்காலும். மேற்கு சின்னத்தம்பியார் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு கந்தப்பு முருகேசுவுக்குடைய ஆதனம். இதுமுழுவதும்.

5, கரவெட்டி வென்றிக்குறிச்சியிறை. இலகடி நில. பர, 6 3/8. ஷவீடு 1. ஷ நில. பர. 3 3/8. இப்பிரிவுகளில் வடகிழக்குப்புறமாக நில. பர. 1 கழித்து மிகுதியில் ஆட்சிப்படி 2/9 பங்குக்காக நில, பர. 2 1/4. இதில் கிழக்கரைவாசியும் ஷ இலகடியில் வடகிழக்குப்புறமாக நில. பர. 1 நீக்கி மிகுதியில் வடக்குப்புறமாக 2/3 பங்கில் 1/3 பங்குக்கு நில. பர. 2 குளி 3-ம் ஒரே துண்டாக இருக்கிறது. கூடிய நில. பர. 3. குளி 7½. வீடுகள் பனைகள் வடலிகள் கிணறும், எல்லை கிழக்கு சேதர் சிதம்பரப்பிள்ளைக்கும் இலகடி வயிரவசுவாமி கோயிலுக்குடைய ஆதனமும், வடக்கு இலகடி வயிரவசுவாமி கோயிலுக குடைய ஆதனமும் தெருவும். மேற்கு கணபதிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு மேற் சொல்லிய 2-ம் ஆதனமும் எதிராளிக்குடைய ஆதனமும், இவ் வெல்லைக்குட்பட்டவை முழுவதும்.

1-ம், 2-ம், 3-ம், 4-ம் ஆதனங்கள் முதலாவதாக விற்கப்படும். விற்றுவரும் பணம் போதாமையாக இருந்தால் கரவெட்டி மேற்கு வல்லிபுரம் சிவப்பிரகாசம் மிகுதிப் பணத்தைக் கட்ட வேணும். கட்டத்தவறினுல் 5-ம் ஆதனம் விற்கப்படும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்.

புலோலிகிழக்கு, 9-11-1962.
M 179, 16-11-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
சுண்டிக்குளி
ஸ்ரீபன் அல்போன்ஸஸ்
—வழக்காளி.

வழ: இல: MB/4095.

எதிராக

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி
1, அன்றன் பிரூன்ஸிஸ் வின்ஸன்ற்றும்
2. பெண் அலெக்ஸான்டிறியா ஜெயமலரும் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/4095-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் விபரிக்கப்படும் ஈட்டுறுதி அதனுல் ஈடாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் கீழ் விபரிக்கப்படும் காணிக்குள் நின்று 1962-ம் ஆ மார்கழி மீ 20 உ வியாழக்கிழமை (20-12-62) முற்பகல் 10 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா. 3352/- மேலும் ரூபா 3000/-க்கு 22-6-1961 தொடக்கம் 22-11-61 வரை 12% வட்டியும் கூடிய தொகைக்கு 22-11-61 தொடக்கம் இறுக்கும்வரையும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 309-85.

ஈட்டுறுதியின் விபரம்:

1958-ம்ஆ வைகாசிமீ 22-உ பிரசித்த கொத்தாரிஸ் ஜே. பற்றிக் முகதாவில் 2467-ம் இலக்கத்தில் எதிராளிகள் பேரில் ரூபா 3000/-க்கும் வட்டிக்கும் நிறைவேறிய ஈட்டுறுதியும் அதன் சகல உரிமைகளும்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூரிறை "வினைவன்மடமும் சட்டம்பி காடும் இருப்பன் கொல்லையும் மறு பிரிவுகளும்" நி. பர, 5, ஆனல் அளவைப்படி நில, பர. 5 குளி 5. இதில் தெற்குப்புறமாக அறுதிவிற்ற நில பர. 2 குளி 11½ நீக்கி மிகுதியாய் வடக்குப்புறமாயுள்ள நில.பர (2) இரண்டு, குளி (11½) பதினென்றரையும் கல்வீடும் தென்னைகளும் வான்பயிர்களும் தெற்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை கிழக்கு யோசேப்பு சுவாம்பிள்ளையினுதனம், வடக்கு செல்லம்பாட்லெற்றினுதனம், மேற்கு ரேட்டு தெற்கு பிறஞ்சிப்பிள்ளை மகள் மேரி திரேசாவினுதனம். இதடங்கலும்,

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 10-11-62
M. 182 16-11-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
கிளுவனை களபூமி காரைநகர்
முருகேசு பெண் தங்கமுத்து
வழக்காளி.

எதிராக

இல M B 4185

முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம் தம்பு முத்துநாசா
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4185ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1962ம்ஹு மார்கழிமீ 15ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:– முதல் வட்டி ரூபா 12235-50 சதமும் ரூபா 9000-க்கு 7-8-1961 தொடக்கம் 10-4-1962 வரை 9 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 366-26 சதம்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "களுத்தறுத்தானும் தலையடையும்" பர. நீ. இல. அரை (பர. நீ. இல. ½) வீடுகளும், கிணறும். எல்லை கிழக்கு ரேட்டு. வடக்கு தில்லையம்பலம் அருமைநாயகத்தினுதனம். மேற்கு தானியேல் இராசையாவிற்குரியவாதனம். தெற்கு லெவி பொன்னையா ஸ்பென்சருக்குரியவானம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும். இதன் பதிவு D 224/269.

காரைநகர்:
1962-ம்ஹு ஐப்பசிமீ 23-ம்உ
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M 185 16-11-62.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல: M B 3994
யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல. 78 மானிப்பாய் ரேட்டு யாழ்ப்பாணம் ஆறுமுகம் அருளம்பலம் கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை. - வழக்காளி.

எதிராக

5ம் ஒழுங்கை, பிறவுண் ரேட்டு யாழ்ப்பாணம்,
1, நாகன் கதிரவேலுவும்பெண்
2. பாக்கியமும்
3. ஆறுமுகம் சண்முகம் கைம்பெண் சீதையும்.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3994 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் ஆதனம் 1962ம் ஸ்ரீ மார்கழி மீ 21உ வெள்ளிக்கிழமை (21-12-62) முற்பகல் 10 மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 3437-50 சதமும் இன்னும் ரூபா 2500க்கு 3-5-1961 தொடக்கம் 11-9-61 வரை 18 வீதம் வட்டியும் கூடியதொகைக்கு 11-9-61 தொடக்கம் இறுக்கும் வரையும் 5 வீத வட்டியும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "நரியன்குண்டு" நி. பர. (1) ஒன்று, குளி (10/16) பதினாறில் பத்தும். இதற்கெல்லை கிழக்கு சின்னவன் பொன்னுத்துரையின் ஆதனம். வடக்கு மாணிக்கம் இளையதம்பிக்கும் குமாரசுவாமி கைம்பெண் தையல்நாயகிப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை. ஆறுமுகம் கிருஷ்ண பிள்ளையினுதனம், கிருஷ்ண பிள்ளை பெண் செல்லாச்சிப் பிள்ளையினுதனம். இதடங்கலும் இன்னும் தெற்கெல்லைக காணியிலிருக்கும் கிணற்றுப்பங்கும், வழி வாய்க்காலுரித்தும் தூர்வையுரித்தும். இறை சூத்திர பாவிப்பும். இன்னும் மேற்கெல்லைக் காணியில் காணும் ஒழுங்கையில் இருக்கும் பாதையுரித்தும். இதடங்கலும் செய்பயிர்களும் கல்வீடும் மற்றுமதற்குரியவைகளும்.
பதிவு D 171/32.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம், 12-11-62.
M 183 16-11-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அருளையா இளையதம்பி
உடையார் வளவு
உரும்பிராய் வடக்கு
வழக்காளி.

இல. M B 4010

எதிராக

அப்பாக்குட்டி மரியாம்பிள்ளை பூபாலசிங்கம் கைம்பெண் பூமணி மூன் பஞ்சாட்சரம் மனைவி கோண்டாவில் வடக்கு தற்பொழுது இரமுவக்குளம் 2ம் வட்டாரம் - வவுனியா,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4010 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1962ம் ஆண்டு மார்கழி மாதம் 8 ம் உ (8-12-62) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1912-50ம் 11-5-61 தொடக்கம் 23-11-61வரையில் ரூபா1500க்கு 10 வீத வட்டியும் அதன் பின் பணம் முற்றாக இறுபடும்வரையில் முழுத்தீர்வைத் தொகைக்கு 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 205-77ம்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோயில்பற்று கோண்டாவில் இறை "கடையன் புலம்" பரப்பு நில லாச்சம் 15. மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இந்தப் பரப்புப் பதினைந்துக்கும் எல்லை கிழக்கு இராமலிங்கம் பெண் கதிராசிக்கும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு சின்னப்பிள்ளை கந்தருக்கும் பங்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 4382
இரத்தினம் துரைஐயா
ஆசுபத்திரி வீதி யாழ்ப்பாணம்.
-வழக்காளி

எதிராக

1. பொன்னையா தம்பையாவும் மனைவி
2. சிவபாக்கியம்
3. வயித்தி காத்திகேசு சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
- எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4382 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1962 ம் ஆண்டு மார்கழி மாதம் 15ம் உ (15-12-62) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1680-ம் 9-11-61 தொடக்கம் 7-6-62 வரையிலும் ரூபா 1500 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும்வரையில் மூழுத் தீர்வைத்தொகைக்கு 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 192-17ம்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயில் பற்று சுண்டிக்குளி பறுகுன்காட்டிறை "இரக்கன் தோட்டமும் நீலன் கரையும்" நில பரப்பு இரண்டும் கல்வீடும் பயிர்களும் அதைச்சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு முதலாம் எதிரி பொன்னையா தம்பையாவினுதனம். வடக்கு கதிரவேலு சின்னையாவிற்கும் அவர் மனைவி எலெனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கார்த்திகேசு துரைசாமிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு இலங்கை அரசினர் புகைஇரதவீதியும் இதடங்கலும். D 96/295 ல் சொல்லப்பட்ட காணியில் இது ஒரு பகுதி.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 1-11-62.
M. 181 16-11-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில் பொன்னு முருகேசு -வழக்காளி.

எதிராக

இல. M. B. 2904
மானிப்பாய் பெற்றோல் குதத்திற்கு அருகாமை,
இராசையா கைம்பெண் இராசலட்சுமி தானுகவும்காலம்சென்ற தனது புருஷன் இராசையாவின் ஆஸ்திக்குபிரதிகாரியஸ்தராகவும்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திக் கோட்டில் M B 2904-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1962ம்ஆண்டுடிசெம்பர் (மார்கழி) மாதம் 17-ம் திகதி (8-12-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 1500-ம் இதில் ரூபா 1000 க்கு 30-6-59 திகதி தொடக்கம் 31-5-60 திகதி வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் மூழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 245-72 சதம். இதில் ரூபா 1350 இறுபட்டது,

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவிலிறை "மருதன் சீமாவும், பருதி சீமாவும்" நிலப்பரப்பு மூன்றரை (3½ம்) வீடும் பயிர்களும்

காளருக்குமுரியவாதனம். மேற்கு ஒழுங்கை. தெற்குவேலுப்பிள்ளை பொன்னையாவிற்கும் மறுபேருக்குமுரியவாதனம். இதடங்கலில் சொரியலாய் ஒன்பதினிருபாகமும் (2/9) அதைச் சேர்ந்தவைகளும்.

க. செல்லத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
முருகன்-இல்லம்.
இணுவில் 1-11-62.
M 180, 16-11-62.

உ

# ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் குருபூசை

நிகழும் சுபகிருதுஸ்ரீ கார்த்திகைமீ சஉ (19-11-62) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் குருபூசை நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்:

மு. ப. 9 — பி. ப. 1 மணி
சபை சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை
நாவலர் மண்டபத்தில் கடவுளாராதனை
நாவலர் சரித்திரம் படித்தல், மகேசுரபூசை.

### இரவு நாவலர் நினைவுக்கூட்டம்

தலைவர்: பண்டிதர், பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்.

ஆரம்பம் இரவு 7 மணி

**தமிழ்மறையோதல்**
ஸ்ரீமத். தி, கலியாணசுந்தரக்குருக்கள் அவர்கள்

1. **தலைவர் முன்னுரை**
2. **நாவலர் காட்டிய வழி**
   சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள்
3. **நாவலர் தொண்டுகள்**
   சைவப்பிரசாரகர் திரு பொ. அப்புக்குட்டி அவர்கள்.
4. **நாவலரும் தமிழும்**
   வித்துவான் திரு ந. சுப்பையாபிள்ளை அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
14—11—62.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உசன் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தாக்கள் கரம்பகம் 1. தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம், 2. கந்தையா வினாசித்தம்பி, 3, சந்திரசேகரி இராசரத்தினம், 4. உசன் கந்தையா சுவாமிநாதர்.
வழக்காளிகள்

இல. 1929
மிருசுவில். பெஞ்சமின் யேம்ஸ் கரல்டோ பொன்ராசா.
— எதிராளி

யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை திழக்கு நீராவியடி ரேட்டு நாகராசா பரமநாதன்,
— கூட்டு எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 1929-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1962-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மீ 15-ந் திகதி (15-12-62) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை:-முதல் வட்டி ரூபாய் 8325-ம். இதில் ரூபா 6000-க்கு 12-1-60 திகதிதொடக்கம் 13-6-60 திகதி வரைக்கும் 100-க்கு 10 வித வட்டியும் பின் திகதி தொடக்கம்முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 289-57½ சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி எழுதுமட்டுவாள் கோவிற்பற்று மிருசுவிலிறை "செம்பாடு" நிலப் பரப்பு 15 1/4-ல் "நுனுவில் செம்பாடு" நிலப்பரப்பு 14 3/8-ம் ஆட்சிப்படி மேலதிகம் நிலப்

எல்லை கிழக்கு கந்தையா இராசையாவின் ஆதனம். வடக்கு கை ஒழுங்கை. மேற்கு சிதம்பரி செல்லையாவுக்கும் சிதம்பரி கந்தையாவுக்குமுரிய ஆதனம். தெற்கு பாதை, இதடங்கலும் இன்னும் தெற்குக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் தூர்வைப்பங்கும்.
முற்பதிவு D. 110/241.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 6-11-1962.
M. 178 9-11-62

## திருவாவடுதுறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிரசங்கத்தாலும் கல்விச்சாலைகளாலும் தமது மதத்தை வளர்ப்பதை நாவலர் அறிந்தார். தமிழ்க் கல்வியின் ஒளிவீச ஒரு கல்விச்சாலை நிறுவினார். புத்தகங்கள் பல எழுதி அச்சுவாகன மூரச் செய்தும், பிரசங்கமாரியால் சைவசீலர்களின் உளம் குளிரச் செய்தும் அரிய பெரிய பணிகள் நாவலர் செய்தார்.

நாவலர் என்ற பட்டம் நல்கிய திருவாவடுதுறை ஆதீன கர்த்தராகிய குருமூர்த்திகள் நாவலரவர்கள் சிவபத்தியை மிகவும் வியப்பார்கள். சைவ சமய குரவர்களோடு ஐந்தாவது குரு என்றால் மிகையன்று.

உண்மையும், வீரமும், சிவ பத்தியும் ஆகிய இவைகள் நாவலரைப் பல இடையூறுகளின்றும் காத்தன. இராமலிங்க சுவாமிகள் ஏவலின்படி தீக்ஷிதர்கள் தொடர்ந்த வழக்குகள் புகைந்து போயின. யாழ்ப்பாணப் பிரமுகர்கள் பகையால் சில சூழ்ச்சி செய்தும் பயனில்லை. கந்தபுராணம், திருவிளையாடற் புரா

பரப்பு 7 3/8-ம் சேர்த்து நிலப் பரப்பு 37-ம், எல்லை கிழக்கு எஸ். என்- சின்னத்தம்பியின் ஆதனம். வடக்கு சரவணமுத்து கார்த்திகேசுவுக்கும் எஸ், ரீ. நிச்சாட்டுக்குமுரிய ஆதனங்கள் மேற்கு ஒழுங்கை. தெற்கு உசன் ஊரெல்லை ஒழுங்கை, இதில் காணியிலும் பிரயோசனங்களிலும் சொரியலாய் அரைவாசியும். கல்வீடும் கிணறும்.
முற்பதிவு F 289/182.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 6-11-1962.
M 117 9-11-62.

## முள்ளியவளை நிருபர்

ஸ்ரீ. சங்கர சுப்பிரமணியசர்மா அவர்கள் 'இந்துசாதனம்' முள்ளியவளை நிருபராகவும், விற்பனையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்,

## நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி.

எதிர்வரும் (19—11—62) கார்த்திகைத் திங்கள் 4-ம நாள் நாவலர் பெருமான் நினைவுத்தினம்.

தமிழ கூறும் நல்லுலகம் புகழ்கூறிப் போற்றும் நமநாட்டு நாவலருக்கு இந்துசாதனம் ஈழத் தமிழர்கள் சார்பில் இவ்வாண்டு உவந்து புரியும் நன்றிப் பணியாக, நினைவுக் கட்டுரைப் போட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றோம். போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்,

1. மாணவர் பிரிவு.
2. மற்றையோர் பிரிவு

ஒவ்வொரு பிரிவிலும் முதன்மைபெறும் மூவருக்கும பரிசில்கள் வழங்கப்படும். அவர்களின் அந்தக் கட்டுரைகள இந்துசாதனம் வைரவிழா மலர் சஞ்சிகையில அவர்கள் புகைப்படங்களுடன் வெளியிடப்படும்,

### தலைப்புகள்

1. தேவையும நாவலர் சேவையும்.
2. நாவலர் செயல்வன்மை.
3. நாவலரும் பழந்தமிழ்நூல்களும.

ஏதாவதொன்றைப்பற்றி (Foolscap) தாளில் 4 பக்கத்திற்குட்படாமலும் 8 பக்கங்களுககு மேற்படாமலும் எழுதி 20-11-62 க்கு இடையில இந்துசாதனம் வண்ணார்பண்ணை யாழ்பபாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும.

ணம், பெரியபுராணம் என்பன கண்முன் அவர் ஆராய்ச்சித் திறமைகாட்டி மிளிர்கின்றன. பெரியபுராண உபோற்கந்தம், பின்பு எழுதிய சூசனம ஆகியவை இறுசகமும் பொருட்செறிவும், வடநூற் பிரமாண விளக்கமும் பொதுளித் தமிழகம் முழுதும் பேரொளி காட்டிச் சிறந்தாக அவை போற்றப்படுகின்றன. நாவலர் அறங்கள் என்றும் அழியாது விளங்குவதாக.

## கவிபாடும் திறனளிக்கும் அன்னை

அன்னையே!
வசந்த காலத்தில் ஆகாயத்தில் தோற்றும் சந்திரனைப் போன்ற சுத்தமுள்ளவராகவும், பிறைச்சந்திரனைத் தரித்தவராகவும், இரு கரங்கள் அபயம் வரதமாக விளங்கவும், ஏனைய இரு கரங்களில் படிகமாலை, புத்தகம் ஆகியவற்றைத் தாங்கியவராகவும் உள்ள உன் உருவத்தை ஒரு முறையாவது வணங்குபவன் திராட்சைரசம் போல் சுவையளிக்கும் வாக்கைப் பெறுமலிருப்பானு?

—ஸௌந்தர்யலஹரி,

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் [illegible] பிள்ளை சின்னத்துரை அவர்களால் 16-11-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவபிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org